பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 20 | செவ்வாய்க்கிழமை | 06.01.2026 | அதிர்வு 159

## சு.க. மீண்டெழும்!

### கடமையேற்ற கையோடு சூளுரைத்த சாமர எம்.பி.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நிச்சயம் மீண்டெழும் என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் 06▶




# அமெரிக்காவுக்கு எதிராக கொழும்பில் போராட்டம்!

## வெனிசுலா மீதான ஆக்கிரமிப்பைக் கண்டித்து கோஷம்

**வெனிசுலா மீதான அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கையைக் கண்டித்து கொழும்பில் நேற்று மாலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

**முன்னிலை சோசலிசக் கட்சி உள்ளிட்ட மக்கள் போராட்ட இயக்கத்தினரால் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் நடைபெற்றது.**

**இதில் இடதுசாரி அரசியல்வாதிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.** 07▶

## ஜோன்ஸ்டனும் இளைய மகனும் விளக்கமறியலில்!

சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனத்தைத் துஷ்பிரயோகம் செய்தனர் என்று கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் அவரது இளைய மகன் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பாக நேற்று வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, அவர்களை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அமைச்சராக இருந்த காலப்பகுதியில் சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனத்தை உத்தியோகபூர்வமற்ற முறையில் பயன்படுத்தியமை மற்றும் அதன் மூலம் அரசுக்கு 06▶






வடக்கு – கிழக்குத் தமிழர்கள் தரப்பில் பிரதான கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சிதான். முக்கால் நூற்றாண்டுக்கும் மேற்பட்ட அரசியல் வரலாறு கொண்ட முக்கியமான கட்சி. கட்சியிலிருந்து அவ்வப்போது பலர் வெளியேறியும் பின்னர் உள் நுழைந்தும் இருக்கின்றனர்.

கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில் கூட, கட்சியில் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளான சிலர் தங்களுக்குள் சேர்ந்து 'ஜனநாயகத் தமிழரசு கட்சி'யைத் தொடங்கி, மாம்பழச் சின்னத்தில் போட்டியிட்டு, இப்போது அரசியலில் காணாமலும் போய்விட்டார்கள். ஜனநாயக தமிழரசு கட்சி இப்போது மூச்சு விடுவதாகத் தெரியவில்லை.

இந்தப் பின்புலத்தில் இப்போது 'தந்தை செல்வா தமிழரசு கட்சி' என்ற பெயரில் ஒரு கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகள் நடக்கின்றன என அரசல் புரசலாக செய்திகள் வெளி வருகின்றன.

ஏற்கனவே கட்சியால் நீக்கப்பட்டு அதிருப்தி நிலையில் இருப்பவர்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு கட்சியிலிருந்து வெளியே 06▶

# போதைப்பொருள் வர்த்தகத்துக்கு முடிவு கட்டி பாதாளக் குழுக்களையும் ஒடுக்கியே தீருவோம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சூளுரை



இலங்கையின் எதிர்கால சந்ததியினரைப் போதைப்பொருளின் கெடுபிடியிலிருந்து பாதுகாப்பதற்கும், பாதாள உலகக் கும்பல்களின் செயற்பாடுகளை ஒடுக்குவதற்கும் தற்போதைய அரசு தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அனுராதபுரம் இலங்கை பொலிஸ் பயிற்சி நிலையத்தில் நேற்று பொலிஸ் பயிற்சிகளை நிறைவு செய்ததன் பின்னர் வெளியேறும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "போதைப்பொருள் வர்த்தகம் இலங்கையில் பாரிய புற்றுநோயாகப் பரவியுள்ளது. நாட்டின் எதிர்காலச் சந்ததியினரைப் போதைப்பொருளின் கெடுபிடியிலிருந்து பாதுகாப்பதற்கும், பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை ஒடுக்குவதற்கும் தற்போதைய அரசு தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நாட்டில் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளும் போதைப்பொருள் வர்த்தகமும் ஒன்றோடொன்று இணைந்துள்ளன. இவற்றை வேரோடு ஒழிப்பதற்குப் பொலிஸாரும் முப்படையினரும் இணைந்து தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

போதைப்பொருள் கடத்தல், வர்த்தகம், சந்தையில் உள்ள கேள்வி ஆகியவற்றை முழுமையாக ஒழிப்பதற்கு விசேட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் சேவையை மேலும் வலுப்படுத்தும் நோக்கில இவ்வருடம் மாத்திரம் 10 ஆயிரம் புதிய உத்தியோகத்தர்களைப் பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் என்பன பெறப்பட்டுள்ளன. அதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நீண்டகாலமாக நிலுவையிலிருந்த பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் ஏற்கனவே 5 ஆயிரம் பேருக்குப் பதவி உயர்வுக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன், இவ்வாண்டு மேலும் 5 ஆயிரம் பேருக்குப் பதவி உயர்வு வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. பொலிஸ் உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைக்குத் தகுந்த சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், பொலிஸ் நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், உத்தியோகத்தர்களுக்கான ஏனைய நலன்புரி வசதிகளை உறுதிப்படுத்தவும் அரசு முன்னுரிமை அளித்துள்ளது.

பழைய பொலிஸ் முறைகளைக் கொண்டு எதிர்வரும் காலங்களிலும் முன்னோக்கிச் செல்ல முடியாது. பொலிஸ் திணைக்களத்தை முழுமையாக நவீனமயப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதற்கமைய பொலிஸ் சேவைக்குள் நவீன தொழில்நுட்பத்தை இணைத்து தொழில்நுட்பம் சார்ந்த அறிவுடன் பொலிஸ் உத்தியோகத்தர்களை மேம்படுத்த வேண்டியுள்ளது.

தற்போதைய பொலிஸ் சேவையின் வளர்ச்சிக்குப் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்னவின் அனுபவமிக்க வழிகாட்டல் பெரும் பலமாக உள்ளது." – என்றார்.

# எரிபொருள்களின் விலைகள் அதிகரிப்பு



பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின்படி நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள்களின் விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

335 ரூபாவாக இருந்த ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 340 ரூபாவாகும்.

இதேவேளை 277 ரூபாவாக இருந்த ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 2 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 279 ரூபாவாகும்.

318 ரூபாவாக இருந்த சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 323 ரூபாவாகும்.

மேலும், மண்ணெண்ணெய் 2 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 182 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது.

ஒக்டேன் 95 ரக பெற்றோலின் விலையில் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படாது 294 ரூபாவுக்கே விற்பனை செய்யப்படவுள்ளது.

இதேவேளை, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்துக்குச் சமாந்திரமாக லங்கா ஐ.ஓ.சி நிறுவனமும் தமது எரிபொருள்களின் விலைகளைத் திருத்தியுள்ளது.





# ரஷ்ய முதலீட்டாளர்கள் வடக்கில் முதலீடு செய்ய ஊக்குவியுங்கள்!

## அந்நாட்டு தூதுவரிடம் வடக்கு ஆளுநர் கோரிக்கை

“வெளிநாட்டுச் சுற்றுலாவிகள் தமது விடுமுறையை மகிழ்ச்சியாகக் கழிப்பதற்கு வடக்கு மாகாணம் மிகவும் பாதுகாப்பானதும் அமைதியானதுமான ஒரு பிரதேசமாகும். எனவே, ரஷ்யச் சுற்றுலாவிகளின் வருகையை வடக்குக்குத் திருப்ப உதவுவதுடன், எமது மாகாணத்தில் உள்ள முதலீட்டு வாய்ப்புகளில் ரஷ்ய முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதையும் ஊக்குவிக்க வேண்டும்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவன் எஸ்.ஜகார்யனிடம் கோரிக்கை விடுத்தார்.

இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவன் எஸ்.ஜகார்யன், வடக்கு மாகாண ஆளுநரை நேற்று திங்கட்கிழமை மாலை, ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பல தசாப்தங்களுக்குப் பின்னர் ரஷ்யத் தூதுவர் ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டமை மகிழ்ச்சியளிப்பதாகக் குறிப்பிட்டு ஆளுநர் அவரை வரவேற்றார்.

இந்தச் சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த ரஷ்யத் தூதுவர், ”ரஷ்யச் சுற்றுலாவிகள் இலங்கைக்கு அதிகளவில் வருகை தருகின்றனர். எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. எனினும், வடக்கு மாகாணத்துக்கான ரஷ்யச் சுற்றுலாவிகளின் வருகை மிகக் குறைவாகவே உள்ளது. எனவே, இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு வரும் ரஷ்யப் பயணிகளை ஈர்க்கும் வகையில் வடக்கு மாகாணம் தனது சுற்றுலாத் திட்டங்களை முன்னெடுப்பது சிறப்பாக அமையும்.” – என்று சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த ஆளுநர், ”இந்தியாவுடனான நேரடி விமான சேவை காரணமாக அதிகளவான இந்தியச் சுற்றுலாப் பயணிகள் வடக்கு மாகாணத்துக்கு வருகைதருகின்றனர். வடக்கு மாகாணமானது சுற்றுலாவிகள் தங்கிச் செல்வதற்கு மிகவும் பாதுகாப்பான சூழலைக் கொண்டுள்ளது. இதனைத் தாங்கள் ரஷ்ய மக்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் அவர்களின் வருகையை அதிகரிக்க உதவ வேண்டும்.” – என்று கேட்டுக்கொண்டார்.

வடக்கு மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்காக ரஷ்ய முதலீட்டாளர்களை இங்கு முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்குமாறும் ஆளுநர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து, ரஷ்ய கலாசார நிலையம் ஊடாக இலங்கையர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் மற்றும் உயர்கல்வி வாய்ப்புகள் குறித்துத் தெளிவுபடுத்திய தூதுவர், இந்த வாய்ப்புகளை வடக்கு மாகாண மாணவர்களும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மற்றும் ஆளுநரின் இணைப்புச் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.







# 2021 இல் வாங்கிய லஞ்சத்துக்காக நேற்று ஏ.எஸ்.பியும் ஒரு பெண் சார்ஜண்டும் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வெல்லாவெளியில் கடமையாற்றிவரும் சக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரிடம் 72,000 ரூபா பணம் மற்றும் கைபேசியை கையூட்டலாக 2021 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டனர் எனக் கூறப்படும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பெண் சார்ஜண்ட் ஆகியோரை நுவரேலியா மற்றும் கல்முனையில் வைத்து நேற்றுத் திங்கட்கிழமை லஞ்ச அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டனர்.

வெல்லாவெளி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் கல்முனை நற்பட்டிமுனைப் பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், தனது வீட்டிலிருந்தே பணிக்கு வந்து செல்வதற்காக மட்டக்களப்பு பிரிவுக்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகரின் அனுமதியைப் பெறவேண்டியிருந்தது.

இதற்கமைய கடந்த 2021ஆம் ஆண்டு களுவாஞ்சிக்குடி உதவி பொலிஸ் அத்தியட்சகரை இந்த பொலிஸ் கான்ஸ்டபிள் அனுகியபோது அவர் இதற்கான பரிந்துரைகளைச் செய்து தருவதாகக் கூறி, அவரிடமிருந்து பல சந்தர்ப்பங்களில் கைபேசி உள்ளிட்ட பொருள்களையும், 72,000 ரூபா பணத்தையும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பெண் பொலிஸ் சாஜண்ட் இலஞ்சமாகக் கோரிப் பெற்றுள்ளனர்.

இதனையடுத்து உதவி பொலிஸ் அத்தியட்சகர் கடந்தவரும் இடமாற்றம் பெற்று நுவரெலியாவுக்கு சென்றுள்ளார். அதேசமயம் பெண் பொலிஸ் சாஜண்ட் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்துக்கு இடமாற்றம் பெற்று சென்றுள்ளார்.

இந்த நிலையில் இந்த லஞ்சம் வாங்கியமை தொடர்பாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து நேற்று திங்கட்கிழமை தற்போது நுவரெலியாவில் கடமையாற்றிவரும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் காலை 10.50 மணியளவில் அங்கு வைத்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை கல்முனை பொலிஸ் உதவி அத்தியட்சகர் காரியாலயத்தில் கடமையாற்றிவரும் பெண் சர்ஜண்ட் பிற்பகல் 3.00 மணிக்கு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இருவரையும் முறையே நுவரெலியா மற்றும் கல்முனை நீதிவான் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# நிரந்தர சாரதி அனுமதி அட்டைகள் விரைவில் பெற்றுக்கொடுக்கப்படும்




தற்காலிகமாக விநியோகிக்கப்பட்டுள்ள சாரதி அனுமதி பத்திரங்களுக்கு பதிலாக, நிரந்தர சாரதி அனுமதி அட்டைகள் விரைவில் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன.

அதன்படி, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதிக்குள் அவற்றை விநியோகிக்க எதிர்பார்ப்பதாக, மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக, சுமார் 240,000 சாரதி அனுமதி அட்டைகளை அச்சிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

# பெண்ணை தாக்கிய சந்தேக நபரை கைது செய்ய பொதுமக்களின் உதவியை நாடும் பொலிஸார்

குருநாகல், மாவத்தகம காவல் பிரிவிற்குட்பட்ட பகுதியில் பெண் ஒருவர் மீது அமிலத் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்ற சந்தேக நபரைக் கைது செய்ய பொலிஸ் பொதுமக்களின் உதவியை நாடுகிறது.

மேற்படி சந்தேகநபர் கடந்த டிசம்பர் 10 ஆம் திகதி அந்தப் பெண்ணைத் தாக்கியுள்ளார்.

இந்தக் குற்றம் தொடர்பான உண்மைகளை பொலிஸார் நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளதாகவும், இந்தக் குற்றத்தைச் செய்த சந்தேக நபர் அந்தப் பகுதியை விட்டுத் தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது.

அதன்படி, இந்த சந்தேக நபரைக் கைது செய்வதற்கு பொலிஸ் பொதுமக்களின் உதவியை நாடுகிறது.

சந்தேக நபர் தொடர்பாக ஏதேனும் தகவல் இருந்தால் 071 8591258 என்ற தொலைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.







# மந்திகை வைத்தியசாலை வீதியில் கனரக வாகனங்கள் செல்லத்தடை

**(மரியசீலன் திலைக்ஸ்)**

மந்திகை வைத்தியசாலை வீதியில் கனரக வாகனங்கள் செல்லத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

மந்திகை வைத்தியசாலைக்கு முன்புள்ள வீதியில் கனரகவாகனம் செல்வதற்கு தடைவிதிக்கவேண்டும் என்னும் தீர்மானம் பருத்தித்துறை பிரதேச சபையில் ஏகமனதான அண்மையில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானத்துக்கமைய நேற்றையதினம் மந்திகை வைத்தியசாலைக்கு முன்புள்ள வீதியில் கனரக வாகனங்கள் செல்வதற்கு முற்றாக தடைவிதித்து பருத்தித்துறை பிரதேச சபையால் அறிவித்தல் பலகை நாட்டிவைக்கப்பட்டுள்ளது.

அனைத்து கனரகவாகன சாரதிகளும் இவற்றைக் கருத்தில் எடுக்குமாறும், மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தவிசாளர் யுகதீஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## யாழ் மாநகரசபை வரியிறுப்பாளர் கவனத்திற்கு

வரியிறுப்பாளர்கள் தமது ஆதனங்களுக்கான 2026 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை ஜனவரி 31 ஆம் திகதிக்குள் செலுத்தி 10% கழிவினையும், காலாண்டிற்கான ஆதனவரியினை அக்காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தி 5% கழிவினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

| விபரம் | செலுத்த வேண்டிய திகதி | கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதித் திகதி | கழிவு வீதம் |
|---|---|---|---|
| முழு ஆண்டுக்குமானது (01.01.2026 - 31.12.2026) | 01.01.2026 - 31.01.2026 | 31.01.2026 | 10% |
| முதலாவது காலாண்டு | 01.01.2026 - 31.03.2026 | 31.01.2026 | 5% |
| இரண்டாவது காலாண்டு | 01.04.2026 - 30.06.2026 | 30.04.2026 | 5% |
| மூன்றாவது காலாண்டு | 01.07.2026 - 30.09.2026 | 31.07.2026 | 5% |
| நான்காவது காலாண்டு | 01.10.2026 - 31.12.2026 | 31.10.2026 | 5% |

மேலும் யாழ் மாநகர வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரையும், தைப்பொங்கல் தவிர்ந்த பொது விடுமுறை நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரையும் ஆதனவரியினைச் செலுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2026ஆம் ஆண்டிற்கான ஆதன வரி அறிவித்தல் (K form) கிடைக்கப் பெறாதவர்கள் இதற்கு முன்னைய ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல் அல்லது ஆதன வரி செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டு அல்லது ஆதனம் அமைந்துள்ள வட்டாரம், வீதி மற்றும் ஆதன இலக்கம் போன்ற விபரங்களை சமர்ப்பித்தும் 2026ஆம் ஆண்டிற்கான ஆதனவரியைச் செலுத்த முடியும்.

இதே போன்றே கடந்த காலங்களுக்கான ஆதனவரி நிலுவைகளையும் செலுத்துவதன் மூலம் சேவைகளையும் இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும். 2025ஆம் ஆண்டின் ஆதனவரிப் பெறுமதியிலும் கட்டணங்களிலும் மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை.

2026ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் முழுமையாக விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் 31.12.2025ஆம் திகதிக்குள் ஆதனவரி அறிவித்தல்கள் கிடைக்கப் பெறாதவர்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் யாழ்.மாநகரசபையின் ஆதனவரி பகுதியுடன் தொடர் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிள்றேன்.

**வி.மதிவதனி,**
மாநகர முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரக்கூடிய அதிருப்தியாளர்களையும் அரவணைத்து, போட்டியாக ஒன்றை இயக்குவது பற்றி சில தரப்புகள் தங்களுக்குள் பேசிக் கொள்கின்றன, காய் நகர்த்துகின்றன எனத் தெரிகிறது.

இதற்கிடையில் ஏற்கனவே கட்சியில் இருந்து இடை நிறுத்தப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சிவமோகன் கட்சியின் தலைவருக்கும் செயலாளருக்கும் எதிராக நீட்டி முழக்கி இருக்கிறார். புதிதாக உருவாகக்கூடிய கட்சியில் சீற்றுக்குத் துண்டு போட்டு வைக்கும் வேலையாக இருக்குமோ தெரியவில்லை.

ஏற்கனவே கட்சியின் கட்டுப்பாட்டுக்களை மீறி நடந்த குற்றச்சாட்டில் அவர் மீது ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருக்கிறார். அந்த இடைநிறுத்த நடவடிக்கைக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த அவர், அந்த வழக்கை ஒட்டி இடைக்கால தடை உத்தரவு பெற முடியாத பின்புலத்தில், வழக்கை வெற்றிகரமாக வாபஸ் பெற்று விட்டார்.

அதன் பின்னர் தமது நடவடிக்கைகளுக்காக மன்னிப்பு கோரி அவர் கட்சிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தார். அந்தக் கடிதம் மத்திய குழுவில் பரிசீலிக்கப்பட்ட போதிலும், அவரது நடத்தை தொடர்பில் அந்த மன்னிப்புக் கோரல் கடிதம் போதுமானது அல்ல என்று கட்சியின் மத்திய குழு கருதிய சூழலில், அந்த கடிதம் இன்னமும் முடிவெடுக்கப்படாமல் நிலுவையில் இருக்கின்றது.

இந்தச் சமயத்தில்தான் நேற்று கட்சியின் தலைவர், செயலாளர் போன்றவர்களுக்கு எதிராக மிக மோசமான தாக்குதலுடன் அவர் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தி இருக்கிறார். அவரது கருத்துக்கள் பற்றிய செய்தி முரசில் பிறிதொரு பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

அவரது பேட்டியின் காணொலி வடிவத்தை கவனத்தில் எடுத்த கட்சியின் தலைமைப் பீடம் இடைநிறுத்தப்பட்டிருந்த அவரை, கட்சியிலிருந்து முழுமையாக வெளியேற்றும் தீர்மானத்தை எடுத்திருப்பதாகத் தெரிகிறது.

எனவே, தமிழரசு கட்சியில் காத்திருக்காமல் அதிருப்தியாளர்கள் உருவாக்கக்கூடிய 'புதிய கட்சியில்' அவர் சீற் பிடிக்க துண்டு போடுவது நல்லது என்றுதான் நினைக்கிறேன்.

* * *

தையிட்டி விகாரையை ஒட்டி நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு எடுக்கப்பட இருக்கையில், அங்கு சூடான சட்ட விவாதம் கட்டவிழும் என்று நேற்றைய எனது பத்தியில் எதிர்வு கூறியிருந்தேன். அது நேற்று நடைபெற்றிருக்கின்றது.

மன்றில் சுமார் அரை மணி நேரம் ஒரு பிடி பிடித்திருக்கிறார் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

தையிட்டி நிலைமையை தெளிவாக எடுத்துரைத்த சுமந்திரன், சட்டவிரோத செயற்பாட்டுக்காக கைது செய்யப்பட்டு இருப்பவர்களை விடுவித்து, பொலிஸாருக்கு எதிராகத்தான் சட்டவிரோத நடவடிக்கைக்காக நீதிமன்ற வழக்கு தொடரப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தமது சட்டவாதத்தையே பொலிஸாருக்கு எதிராகத் திருப்பி வைத்தார்.

தையிட்டி விவகாரத்தில் பொலிஸார் தங்கள் மந்தபுத்தித் தன்மையை வெளிப்படுத்தி இருக்கின்றனர் என்று பிய்த்து உதறினார் அவர்.

இந்த விடயத்தை ஒட்டி பொலிஸார் சமர்ப்பித்த அறிக்கை முழுவதுமே சட்டவிரோதமானவை. காணியை ஆக்கிரமித்த சட்டவிரோத தரப்புக்கு ஆதரவாகவும், சட்ட ரீதியான காணி உரிமையாளர்களுக்கு எதிராகவும் பொலிஸார் கேவலமாக நடந்திருக்கின்றனர் என்று குறிப்பிட்ட சுமந்திரன் உயர்நீதிமன்ற நீதியரசர் மார்க் பெர்னாண்டோவின் இரண்டு பிரபல தீர்ப்புகளை நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

1993 ஆம் ஆண்டில் அப்போதைய ஆட்சியாளர்களுக்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷ போன்ற தரப்பினர் பொது மக்களை வீதிக்கு இறக்கி சத்தமிடும் 'ஜன கோஷ' என்ற போராட்டத்தை முன்னெடுத்த போது, அதற்கு எதிராகப் பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர். அச்சமயத்தில் அந்த விவகாரத்தை ஒட்டிய வழக்கில் தீர்ப்பளித்த நீதியரசர் மார்க் பெர்னாண்டோ, மக்களின் ஜனநாயகப் போராட்டங்களுக்கு எதிராக – குந்தகமாக – பொலிஸார் நடவடிக்கை எடுக்கக் கூடாது, அவற்றைச் சகித்துக் கொள்வது மாத்திரமல்ல, அதையும் தாண்டி அத்தகைய போராட்டங்களுக்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்கவும் வேண்டும். அதைச் செய்யத் தவறினால் பிற்காலத்தில் அந்தப் போராட்டங்கள் வன்முறை வடிவத்தை எடுக்கும் என்று தன்னுடைய தீர்ப்பில் அப்போது அவர் சுட்டிக்காட்டி இருந்தார் என்றார் சுமந்திரன்.

பத்து வருடங்கள் கழித்து 2003இல் மீண்டும் இதே போன்ற ஒரு வழக்கில் தீர்ப்பளித்த அதே நீதியரசர், பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தான் சுட்டிக்காட்டிய விடயம் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை, பொலிஸார் திருந்தவேயில்லை என்பதை மீண்டும் விசனத்துடன் தன் பிந்தைய தீர்ப்பில் தெரிவித்திருந்தார்.

பத்து வருடங்கள் அல்ல, அதன் பின்னர் இப்போது இன்னும் 22 வருடங்கள் கடந்தும் பொலிஸார் திருந்தவில்லை என்பதையே தையிட்டி விடயங்களை இப்போது பொலிஸார் கையாளும் முறைமை வெளிப்படுத்துகின்றது என நேற்று நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டினார் சுமந்திரன்.

சட்டவிரோதக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தால், அதற்கு எதிராக அறிவித்தல் நோட்டீஸ் ஒட்டி, தேவைப்பட்டால் அந்த சட்டவிரோதக் கட்டடத்தை உடைக்கும் அதிகாரம் பிரதேச சபைக்கு உள்ளது. அத்தகைய சமயங்களில் பிரதேச சபையின் அந்த சட்ட ரீதியான நடவடிக்கைக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியவர்கள் பொலிஸார். ஆனால் தையிட்டியில் சட்டவிரோதக் கட்டடம் தொடர்பில் அறிவித்தலை வலி. வடக்கு பிரதேச சபை ஒட்டுகின்ற தீர்மானத்தை முன்னெடுத்த போது, அப்படி நீங்கள் அறிவித்தல் ஒட்டினால் உங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று பொலிஸார் சம்பந்தப்பட்ட பிரதேச சபையின் செயலாளருக்கு எழுத்தில் அறிவுறுத்தி இருக்கின்றனர். இது பொலிஸாரின் சட்டவிரோத செயற்பாடு. சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய பொலிஸார் அத்தகைய செயலுக்கு எதிராக, சட்டவிரோதமான செயலைப் புரிய முயலுகின்றார்கள் என்று சுட்டிக்காட்டிய சுமந்திரன், இந்த விடயத்தில் போராட்டம் நடத்தியவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கை முழுமையாகத் தள்ளுபடி செய்யுமாறு கோரினார்.

என்னுடைய கட்சிக்காரர்களில் ஒருவர் காணியின் உரிமையாளர். அவர் அவரது காணிக்குச் செல்வதற்கு இடம் அளிக்காமல் பொலிஸாரே தடுத்திருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, அவரைக் கைது செய்து இங்கு கொண்டு வந்திருக்கிறார்கள். இது சட்டத்தை மதிக்கத் தெரியாத பொலிஸாரின் கீழ்த்தரமான புத்தி.

ஐந்து பேர் கூடி இருந்தால் சட்டவிரோத கூட்டம் என்ற பெயரில் அவர்களைக் கைது செய்யலாம் என்ற சிந்தனையில்தான் முதல் முறை 5 பேரைக் கைது செய்து பொலிஸார் நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களது மந்த புத்தி அவ்வளவுதான். இதற்கு அப்பால் சட்டத்தைப் பார்க்கின்ற தகுதி நிலையில் பொலிஸார் இல்லை என்பது கேவலமானது என சுமந்திரன் குறிப்பிட்டார்.

இந்த வழக்கு பிப்ரவரி 26ஆம் திக்திக்கு ஒத்திவைக்கப்பட்டு இருப்பதாக சில ஊடகங்கள் தெரிவித்தாலும் வழக்கு ஒத்திவைக்கப்படவில்லை, அன்றைய தினம் நீதிபதியின் உத்தரவுக்காக – தீர்ப்புக்காக – வழக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டவர்கள் எல்லோரையும் அவர்களது சொந்தப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ள சூழ்நிலையில், நீதிமன்றத் தீர்ப்பு எவ்வாறு அமையும் என்பதை ஓரளவுக்கு ஊகிக்கக்கூடியதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

---

## ஜோன்ஸ்டனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நட்டத்தை ஏற்படுத்தியமை தொடர்பில் அவர்கள் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வாக்குமூலமொன்றை வழங்குவதற்காக நிதிக் குற்ற விசாரணை பிரிவுக்கு அழைக்கப்பட்ட நிலையில் அவர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர்.

முன்னதாக, இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மற்றொரு மகனான ஜொஹான் பெர்னாண்டோ மற்றும் சதொச நிறுவனத்தின் போக்குவரத்துப் பிரிவின் முன்னாள் முகாமையாளர் ஆகியோரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

---

## சு.க. மீண்டெழும்!...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாமர சம்பத் தயநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட அவர், நேற்று கட்சித் தலைமையகத்தில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜே.வி.பியானது 3 உறுப்பினர்களை வைத்துக்கொண்டுதான் ஆட்சியைப் பிடித்தது. ஏற்ற, இறக்கங்களை அந்தக் கட்சி சந்தித்தது. இன்று அந்தக் கட்சிக்கு 159 எம்.பிக்கள் இருக்கின்றனர்.

எனவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் நிச்சயம் மீண்டெழும். அதை நோக்கி எமது பயணம் தொடரும். அதற்காக நான் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்.

கட்சியை விட்டுச் சென்றவர்கள் நிச்சயம் மீண்டும் வருவார்கள். பல வருடங்கள் கட்சித் தலைமையகம் பக்கம் வராதவர்கள்கூட இன்று வந்தார்கள். இதுதான் முன்னோக்கி செல்வதற்கான மாற்றம்." – என்றார்.

(மற்றொரு செய்தி 13ஆம் பக்கத்தில்...)



# தரம் 6 மாணவர்களுக்கு கல்வித் திட்டம் இன்னும் அறிமுகப்படுத்தப்படவில்லை

2026 ஆம் ஆண்டிற்கான கல்வி நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப் பட்டுள்ள போதிலும், தரம் 6 மாணவர்களுக்கான முறையான கல்வித் திட்டம் இன்னும் அறிமுகப்படுத்தப்படவில்லை என அதிபர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் நிமல் முதுன்கொடுவ தெரிவித்துள்ளார்.

தரம் 6 மாணவர்களுக்கான பாடத் திட்டங்கள் ஜனவரி 21 ஆம் திகதியே ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதுவரை மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் இல்லாதிருப்பது அதிபர்களையும் ஆசிரியர்களையும் இக்கட்டான நிலைக்கு தள்ளியுள்ளது.

வரலாற்றில் முதல் முறையாக, பாடசாலை ஆரம்பமாகும் முதல் நாளில் வழங்கப்பட வேண்டிய மாணவர் வருகைப் பதிவேடுகள் இதுவரை பாடசாலைகளுக்கு வழங்கப்படவில்லை.

தரம் 6 மாணவர்களுக்காக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள புதிய பாடத் தொகுதிகளில் நூற்றுக்கணக்கான இலக்கணப் பிழைகள் மற்றும் குறைபாடுகள் உள்ளதாக சமூக வலைத்தளங்கள் வாயிலாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தப் பாடப்புத்தகங்களை தயாரிப்பதில் தகுதியான நபர்கள் உள்வாங்கப் பட்டார்களா? என்ற கேள்வியையும் அவர் எழுப்பியுள்ளார்.

பாடப்புத்தகங்களில் உள்ள பிழைகளுக்கு தீர்வாக, குறிப்பிட்ட பக்கங்களை அகற்றுமாறு அரசு அறிவுறுத்தியுள்ளது.

இவ்வாறு சுமார் 8 லட்சம் பக்கங்கள் அகற்றப்பட வேண்டியுள்ளன. இந்த வேலையை யார் செய்வது? என்ற கேள்வி எழுந்துள்ளது.

அத்துடன், இந்தப் பாடப்புத்தகங்களின் டிஜிட்டல் பிரதிகள் ஏற்கனவே இணையத்தில் பரவியுள்ள நிலையில், அச்சுப் பிரதிகளில் இருந்து பக்கங்களை கிழிப்பதன் மூலம் பிழைகளை மறைக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் கல்விப் பொருள்களில் பிழைகள் கண்டறியப்பட்டால், பக்கங்களை அகற்றுவதையே அரசாங்கம் ஒரு தீர்வாக முன்னெடுக்குமா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.







## அமெரிக்காவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெனிசுலா இறையாண்மைமிக்க சுதந்திர நாடு எனவும், அதன் மீதான ஆக்கிரமிப்பு மற்றும் அந்நாட்டு ஜனாதிபதி கைது போன்ற நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது எனவும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

போரை உருவாக்கி, எண்ணெய் வளத்தைக் கொள்ளையடிக்க அமெரிக்கா முற்படுகின்றது எனவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்தப் போராட்டத்தால் அமெரிக்கத் தூதரகத்துக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

அதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது முன்னிலை சோசலிசக் கட்சியினர் கடும் விமர்சனங்களை முன்வைத்தனர்.

இந்த விவகாரம் தொடர்பில் இலங்கை அரசு மௌனம் காப்பது கவலையளிக்கின்றது எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# உண்மையைக் கண்டறிக!

பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் முன்னெடுக்கப்பட்ட கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகள் இன்று கல்வி ஆபாசமாக்கப்படும் நிலையை எட்டி உள்ளது என்ற விமர்சனத்திற்கு உள்ளாகி இருக்கின்றன.

'பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதையாக' இந்த விடயம் மாறி இருக்கின்றது.

இணைய வழி ஊடான கல்விக்காக வழங்கப்பட்ட ஒரு வழிகாட்டல் குறிப்பு, ஓரினச் சேர்க்கையாளர்களை ஒன்றிணைக்கும் சில இணையத்தளங்களுக்கு இட்டுச் சென்றிருக்கின்றமைதான் இப்போதைய சிக்கலுக்குக் காரணம்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டி உள்ள சில விடயங்கள் இப்போதைய நிலையில் கவனிக்கப்பட வேண்டியவையாக உள்ளன. முறையான வழிமுறைகளை கையாளாமல் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களால்தான் இன்று கல்வி ஆபாசமாக்கப்பட்டுள்ளது என்கின்றார் அவர்.

பல நாடுகள், இணையவழி ஊடாகக் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது அந்தந்த நாடுகள் அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளன. அமெரிக்கா *The Children's Online Privacy Protection Act (COPPA)* என்ற வழிமுறை ஊடாக பிள்ளைகளுக்கு பாதுகாப்பு வழிமுறையை பெற்றுக் கொடுத்து வருகின்றது. பிரிட்டனில் *Children's Code* காணப்படுகின்றது. இதன் ஊடாக பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றியம் *GDPR (EU-General Data Protection Regulation)* வழிமுறை ஊடாக இந்தப் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்கின்றது.

இந்தப் புதிய கல்வி சீர்திருத்தத் திட்டத்தில் இவை போன்ற பாதுகாப்பு உள்ளடங்கி காணப்பட வேண்டும் என்று சுட்டுகின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்.

மிக அவசரமாக, முறையான வழிமுறைகளை கையாளாமல், பூரண கலந்துரையாடலை முன்னெடுக்காமல், குறைந்த பட்சம் வெள்ளை அறிக்கை, பச்சை அறிவித்தல்களையேனும் முன்வைக்காமல், இந்தத் திட்டத்தை முறைசாரா முறையில் முன்னெடுக்கச் சென்றுதான், இந்த கல்வி சீர்திருத்த முன்னெடுப்புகள் இன்று ஆபாசமாக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிடுகின்ற விடயம் மறுக்கக் கூடியதல்ல.

இந்த மோசமான நிலைமைக்கு அதிகாரிகள், அரசியல்வாதிகள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் நாட்டின் பிரதமரும் கல்வி அமைச்சரும் பொறுப்புக் கூற வேண்டும் என்று அவர் கோருகின்றமையிலும் நியாயம் உண்டு.

இது குறித்து சுயாதீனமான மற்றும் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். இந்த மோசநிலைக்குக் காரணமானவர்களை தேட வேண்டும். மூடி மறைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பயனில்லை. உண்மைகளைக் கண்டறிந்து அம்பலப்படுத்துவது இழைத்த தவறுக்கு ஒரு சிறிய பிராயச்சித்தமாக அமையும்.



# ஆத்தியடிக்கட்டு ஆற்றில் முதலை இழுத்துச் சென்ற இளம் குடும்பஸ்தர் இரண்டாம் நாள் சடலமாக மீட்பு

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம் ஒலுவில் ஆத்தியடிக்கட்டு ஆற்றில் நேற்று முன்தினம் மாலை மீன் பிடித்துக் கொண்டிருந்த போது திடீரென முதலை ஒன்று இளம் குடும்பஸ்தரை இழுத்துச் சென்றுள்ளது. மாயமான அவர் தேடப்பட்ட நிலையில. நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நீரின் அளவு அதிகரிப்பு, இருளின் மத்தியில் நேற்று முன்தினம் இரவு 10 மணி வரை தொடர் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு இருந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை இரண்டாவது நாளாகவும் தீவிர தேடுதல் முன்னெடுக்கப்பட்ட போது சடலமாக அவர் மீட்கப்பட்டார்.

ஒலுவில்-1 அஷ்ரப் நகர்-12 பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அப்துல் குத்தூஸ் றமீஸ் (வயது-38) என்பவரே முதலை கடித்து உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



இந்த ஆற்றில் மூவர் மீன்பிடிக்க சென்ற நிலையில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இரண்டு நாள்களாக பொதுமக்கள், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய பிரதிப் பணிப்பாளர் ஏ.சி.ஏ. நியாஸ், சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை, பொலிஸ் உத்தியோகத்தர்கள், கடற்படை பிரிவினர் மற்றும் சம்மாந்துறை அல் - உஸ்வா போன்ற அமைப்புகளின் உதவியுடன் இந்த நபரின் சடலம் மீட்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எச்.அல்-ஜவாஹிர் முன்னிலையில் மரண விசாரணைகள் மேற்கொளப்பட்டன. முதலை தாக்கியதால் மரணம் சம்பவித்துள்ளதாகக் குறிப்பிட்டு சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



### வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை சிதைக்கும்

# இந்திய இழுவைப்படகுகளின் வருகையை கட்டுப்படுத்த ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

(பா.சதீசன்)

வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை முற்றாகச் சிதைக்கின்ற இந்திய இழுவைப் படகுகளின் வருகையை உடனடியாக கட்டுப்படுத்துமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரிடம் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

வடக்கில் யாழ்ப்பாணம், தீவகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களின் கடற்பரப்புக்களில் இந்திய இழுவைப்படகுகளின் அடாவடித்தனமான செயற்பாடுகள் அதிகரித்துள்ளமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் இதன்போது கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

குறிப்பாக வடபகுதி கடற்பரப்பில் கடற்கரைகளை அண்மித்து இந்திய இழுவைப்படகுகள் இழுவைமடித் தொழிலில் ஈடுபட்டு கடல்வளங்களை சூறையாடுகின்றமையுடன், வடபகுதி மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்களையும் சேதப்படுத்திச் செல்கின்றன எனவும் நாடாளுமன்ற உறுப்பினரால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.



வடபகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த யுத்தகாலப்பகுதியில் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, தற்போது அவர்கள் தமது அன்றாட வாழ்வாதாரத்தினை கொண்டுசெல்வதற்கே பாரிய இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் எனத் தெரிவித்த ரவிகரன், இந்திய இழுவைப்படகுகளின் இவ்வாறான அடாவடித்தனமான செயற்பாடுகள் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேலும் சிக்கலுக்குள் தள்ளுவதாக அமைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை இந்திய இழுவைப்படகுகளின் அடாவடித்தனமான செயற்பாடுகளை கட்டுப்படுத்துமாறு கடற்றொழில் அமைச்சரிடம் தொடர்ச்சியாக முறையீடுகளைச் செய்துவருகின்றார் எனவும், கடற்றொழில் பிரதியமைச்சர் முல்லைத்தீவிற்கு வரும்போதும் இவ்விடயம் தொடர்பில் தெரியப்படுத்தியிருந்தார் எனவும் அவர் இதன்போது நினைவுபடுத்தினார்.

இருப்பினும் தற்போதும் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன எனவும் ரவிகரன் தெரிவித்தார்.

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய வருகையை கட்டுப்படுத்துவதில் இலங்கை அரசிற்கு இராஜதந்திர ரீதியான சிக்கல்நிலை இருந்தாலும், வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரப் பாதிப்பு நிலையை கருத்திற்கொண்டு இந்திய இழுவைப்படகுகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ரவிகரனால் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில் இந்திய இழுவைப் படகுகளின் வருகையைக் கட்டுப்படுத்துவதற்கு உரியநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென தன்போது கடற்றொழில் அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர் ஆகியோரால் பதிலளிக்கப்பட்டது.

# நானுஓயா குறுக்கு வீதியில் விபத்து மயிரிழையில் உயிர் பிழைத்த சாரதி

## அடிக்கடி அத்துமீறும் கனரக வாகனங்கள்

(மஸ்கெலியா விசேட நிருபர்)

நானுஓயா, ரதல்ல குறுக்கு வீதியில் பயணித்த லொறி ஒன்றில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக சாரதிக்கு வாகனத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து அது தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் லொறியில் சாரதி மயிரிழையில் சிறு காயங்களுடன் உயிர்தப்பியுள்ளார் என நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில நாள்களாக இந்த வீதியில் அதிகமான வாகனங்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாகி வருகின்றன.

செங்குத்தான இவ்வீதியில் அதிக சுமைகளுடன் வேகமாக செல்லும் வாகனங்களினால்தான் பெரும்பாலான விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன எனக் கூறப்படுகின்றது. அத்துடன், பெரும்பாலான வீதி விபத்துக்கள் சாரதிகளின் கவனயீனத்தினால் ஏற்படுகின்றன.

நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியானது 3.2 கிலோமீட்டர் தூரம் கொண்டது. இது செங்குத்தான அதிக சரிவுகளையும் பாரிய வளைவுகளையும் கொண்டுள்ளதால், தகுந்த தடையாளிகளை (பிரேக்) பாவித்து வாகனங்களைச் செலுத்த வேண்டும் ரன்பன போன்ற வசனங்கள் எழுதப்பட்ட அறிவிப்பு பலகைகளும் இவ்வீதியில் இருபுறமும் ஏராளமான இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.



இவ்வீதியின் ஊடாக கனரக வாகனங்கள் செல்வதற்கு முழுமையாக தடை விதிக்கபட்டுள்ளது. இருந்தும் தற்போது தொடர்ந்து இருபுறங்களிலும் தடுப்புகள் ஏற்படுத்தப்பட்ட நிலையிலும் கனரக வாகனங்கள் இரவு மற்றும் பகல் நேரங்களில் அத்துமீறி செல்லும் நிலை தொடர்ந்து நீடிக்கின்றது. இதனால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன.

இனி வரும் காலங்களில் இந்த வீதியைப் பயன்படுத்தும் சாரதிகள் மிகவும் அவதானமாக இருக்குமாறும், போக்குவரத்து விதிகளைஜ் கடைபிடிக்குமாறும், நானுஓயா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.



# பாதிக்கப்பட்ட கந்தப்பளை மக்கள் ஆர்ப்பாட்டம்

(பொகவந்தலாவ நிருபர்: எஸ்.சதீஸ்)

பேரிடராக் பாதிக்கப்பட்டு கந்தப்பளை ஆலய மண்டபத்தில் தங்கியிருந்த மக்களை தங்களது வீடுகளுக்கு செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளமையை அடுத்து நேற்றுத் திங்கள்கிழமை மாலை கந்தபளை பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அனர்த்ததினால் பாதிக்கப்பபட்டு கந்தப்பளை கொன்கோர்டியா மிடில் பிரிவு, எஸ்கடேல் தோட்ட மக்கள் சுமார் 200 பேர் வரை இந்தக் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கந்தப்பளை சீறீ சித்திவிநாயகர் ஆலயத்திற்கு முன்பாகக் கொட்டும் மழையையும் பாராது பதாதைகளை ஏந்தியும் கோசங்களை எழுப்பியும் தமக்கு தேவையான காணி வீட்டினை உடனடியாக பெற்று தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர். பின்னர் கந்தப்பளை நகரத்தைச் சுற்றி அவர்கள் ஊர்வலமாக சென்றனர்

தேசியக் கட்டட ஆராய்ச்சி நிலைய அறிக்கைப் படி தங்களை மீண்டும் வீடுகளுக்குச் செல்லுமாறு கூறுகின்றனர் எனவும் –

தாம் பெரும் அச்சத்தின் மத்தியில் நேற்று (நேற்று முன்தினம்) வீடுகளுக்கு சென்ற போதிலும் அங்கு தாம் நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலை இல்லை எனவும் –

இதன் காரணமாவே தாம் வீதிக்கு இறங்கிக் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கின்றனர் எனவும் – அவர்கள் தெறிவிக்கின்றனர். அரசு தமது கோரிக்கைகளைக் கேட்டு, உறிய நடவடிக்கை எடுத்து, தமக்கு இருப்பிடத்தை அமைத்துத் தரவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.








# தற்காலிக பதவிகளை வைத்துக் கொண்டு தமிழரசுக் கட்சிக்குச் சேறு பூசுகின்றனர்!

## சிறிதரன் மீதான நடவடிக்கை குறித்து சிவமோகன் காட்டம்

(கி.வசந்தன்)

திருட்டுத்தனமாக, அரசியல் அலங்கோலத்தனமாக, துரோகத்தனங்களால் தமிழரசுக் கட்சியின் தற்காலிக பதவிகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள் கட்சிக்கு சேறு பூசும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக சிறிதரன் எம்.பி மீதான நடவடிக்கை குறித்து முன்னாள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரனுக்கும், சிறிநேசனுக்கு எதிராக தமிழரசுகட்சி என்ற போர்வையில் அவிழ்த்துவிடப்படும் சேறு பூசல்கள் தொடர்பாக நாம் கவனம் எடுத்துள்ளோம். அந்த இருவரும் அவர்களது மாவட்டங்களில் அதிகூடிய வாக்குகளை பெற்று நேரடியாக நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்டவர்கள்.

அவர்களுக்கு எதிராக தமிழரசுக் கட்சி என்ற போர்வையில் ஊடக சேறு பூசல்கள் செய்கிறார்கள் என்றால் இவர்களா கட்சியில் விசுவாசம் உள்ளவர்கள்? திருட்டுத்தனமாக, அரசியல் அலங்கோலத்தனமாக, துரோகத்தனங்களால் தமிழரசுக் கட்சியின் தற்காலிக பதவிகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளே இவை.

தமிழ்த் தேசியத்துடன் நிற்ப்பவர்கள் யார், கட்சியை சேற்றுக்குள் புதைக்க நினைப்பவர்கள் யார் என்று மக்களுக்கு தெரியும். 2008 மாவீரர் உரையில் தேசிய தலைவர் தெளிவாக சொன்னமை போல ஈழ விடுதலை போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் அந்த பொறுப்பினை எடுக்க வேண்டிய தமிழரசுகட்சி திருட்டுத்தனமாக சூழ்ச்சிகள் மூலம் அரசியல் சகதிக்குள் தள்ளி விடப்பட்டுள்ளது. இது ஒரு கவலைக்குரிய விடயம்.

இவர்கள் எடுக்கும் உறுப்பினர் நீக்க அரசியல் உடனடியாக முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும். இதுவே எனது கோரிக்கை. இவர்கள் தமிழரசுக் கட்சியில் நேர்மையான முறையில் நியமிக்கப்பட்டவர்கள் அல்லர். மத்தியகுழு என்ற போர்வையில் கட்சியை தவறாக வழிநடத்தி அழித்தொழிக்கும் செயற்பாட்டையே செய்கின்றனர்.

தமிழர் இருப்பிற்கு எதிராக செயற்படும் சிங்கள அரசுகளே எங்களது பொது எதிரி. தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றிருக்கிறது என்றால் அதற்கு காரணம் இவர்களை போன்றவர்களே. தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர், பதில் செயலாளர் ஆகிய அனைவரும் மக்களாலும் கட்சியாலும் நிராகரிக்கப்பட்டவர்கள்.



இன்று திருட்டுத்தனமாக பதவிகளை வைத்துக் கொண்டு விசாரணைகள் என்ற போர்வையில் இவற்றை செய்யக் கூடாது. சிங்களதேசத்தின் இரகசிய நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தும் ஒரு கூட்டமாகவே இதனை நான் பார்க்கிறேன்.

எமது கண் முன்னால் பொது எதிரியும் துரோகியும் இருந்தால் நாங்கள் முதலில் அழிக்க வேண்டியது துரோகியையே. எதிரியை அல்ல. இல்லாவிடில் ஈழ அரசியல் போராட்டம் ஒட்டு மொத்தமாக முறியடிக்கப்படும். எனவே கட்சியில் ஒரு நியாயமான பக்கச்சார்பற்ற விசாரணை குழு ஒன்றை நியமித்து இவர்களது செயற்பாடுகள் அனைத்தும் விசாரிக்கப்பட வேண்டும்.

சிறிநேசன் எம்.பி. அரியநேத்திரனுடன் மேடையில் இருந்து விட்டாராம். இதனால் அவரிடம் விளக்கம் கேட்கிறார்களாம். ஏன் நீங்கள் இருக்கவில்லையா? மஹிந்தவுடன் மேடையில் இருக்காதவர்களா மட்டக்களப்பில் உள்ள அரசியல் தலைவர்கள்? அவருக்கு நீங்கள் சாமரம் வீசவில்லையா? வன்னியில் மக்கள் அழிக்கப்படும் போது பாற்சோறு உண்டு கண்டு கழித்தவர்களே நீங்கள் என்று மக்களுக்குத் தெரியும்.

ஆனால் கட்சி விட்ட தவறால் நீங்கள் முன்னே வந்து எந்த தலைவர் உங்களை கட்சிக்குள் கொண்டு வந்தாரோ அந்த தலைவரை பார்த்து நீர் எப்படி கட்சியின் தலைவராக இருப்பீர்கள் என கேட்டவர்கள்தான் தற்போது மட்டக்களப்பில் உள்ளவர்கள். இதுவே உண்மை.

விசாரணைகளை செய்வதென்றால் எவரை தேசிய பட்டியல் மூலம் கொண்டு வந்து தமிழ்த் தேசிய அரசியலில் அலங்கோலம் செய்ய வழிவிட்டார்களோ அந்த இடத்தில் இருந்து விசாரணைகளை செய்ய வேண்டும். சம்பந்தன் ஐயா சுமந்திரனை கொண்டு வந்த நேரத்தில் இருந்து விசாரணைகள் தொடங்கப்படவேண்டும். எந்த நேரத்தில் மாவை ஐயா மட்டக்களப்பில் ஒருவரை கொண்டு வந்தாரோ அந்த இடத்தில் இருந்து விசாரிக்கப்பட வேண்டும்.

எமது தமிழரசுக் கட்சியை அழிக்கும் நோக்குடன் வழக்குப் போட்டு, பொதுக் குழுவை நிர்மூலமாக்கி, கட்சியையும் நிர்மூலமாக்கிய ஒருவரை இந்தத் தலைமைகள் தமது வீட்டில் கூட்டி வைத்து விருந்துண்டு மகிழ்ந்தார்கள். சிறிநேசன் அரியநேத்திரனுக்கு செய்தது தவறாக இருந்தால் எமது கட்சியை வழக்கு போட்டு நிர்மூலமாக்கியவனை கூப்பிட்டு வைத்து விருந்துண்ட நீங்கள் எந்த இடத்தில் இருக்கிறீர்கள் என்பதை நீங்களே யோசிக்க வேண்டும்.

இல்லை நாங்கள் அப்படி செய்யவில்லை என்றால் இந்த பதில் தலைவர், செயலாளர் ஆகியோர் விருந்துண்ணவில்லை என்றால் அதனை பகிரங்கமாக சொல்லட்டும் பார்ப்போம். சிறிதரனை உருக்குலைத்து விட்டால் யாழில் ஓர் ஆசனம் கிடைக்கும், அதனை நான் கைப்பற்றிக் கொள்ளலாம் என்றும், மட்டக்களப்பில் சிறிநேசனை உருக்குலைத்தாலே எனக்கு வெற்றி என்றும் நினைப்பவர்களின் பின்னால் தமிழரசுக் கட்சி செல்லக்கூடாது. செல்லவும் விடமாட்டோம்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப் பற்று பிரதேசசபை விடயத்தில் உண்மையான தலைவர்களாக இருந்திருந்தால் அன்று அனைத்து உறுப்பினர்களையும் அழைத்து கட்சி எடுத்த தீர்மானம் தொடர்பாக தெளிவாக சொல்லியிருக்க வேண்டும். உறுப்பினர்கள் அனைவரதும் கருத்துக்கள் அறியப்பட்டிருக்க வேண்டும். அதனடிப்படையில் ஒரு பொது முடிவு எட்டப்பட்டிருக்க வேண்டும்.

அதை விடுத்து தமிழரசுக் கட்சியால் தயார் செய்யப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தை அந்த கட்சியை சேர்ந்தவனே தோற்கடிப்பானா? அப்படித் தோற்கடிக்கச் சொல்வது நியாயமா? அதுவுன் அந்த தகவல் வட்சப் ஊடாகவே வழங்கப்பட்டதாம். யார் அதனை நடாத்துபவர் என்றால் பின்னேரமானால் கஞ்சாவிற்கு கீழ் படுத்துக்கிடப்பவர். இது என்ன அமைப்பு? ஒரு பிரதேச சபையைக் கைக்குள் வைத்திருக்க முடியாத நீங்கள் விடுதலையை விரும்பி நிற்கும் தமிழ் மக்களை எப்படி வழிநடத்த முடியும்?

முல்லைத்தீவில் ஒரு முட்டாள் அரசியலில் இருக்க வேண்டும், அவனை வைத்து முல்லைத்தீவில் இருப்பவர்களை நீங்கள் மாடு மேய்க்க வேண்டும். இதுவா உங்கள் அரசியல்? நிச்சயமாக இதற்கு விட்டுக் கொடுக்கப் போவதில்லை.

நீங்கள் விடுகின்ற ஒவ்வொரு தவறுகளும் மக்களுக்குச் சுட்டிக்காட்டப்படும். நீங்கள் செய்யும் ஒவ்வொரு தவறுகளும் தேசிய மக்கள் சக்தியை வெல்ல வைக்கும். எனவே ஜனநாயக ரீதியாக தமிழரசுக் கட்சியை மறுசீரமைப்பதற்கு மத்திய குழுவில் இருக்கும் அனைவரும் முன்வரவேண்டும். கட்சியை மக்கள் விரும்பும் அமைப்பாக கொண்டு நடத்த வேண்டும். - என்றார்.



# சு.கவின் தேசிய அமைப்பாளராக சாமர சம்பத் தசநாயக்க நியமனம்

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் புதிய தேசிய அமைப்பாளராக பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். கட்சியின் பொதுச்செயலாளர் நிமால் சிறிபாலடி சில்வாவிடம் நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் அவர் நேற்று தேசிய அமைப்பாளராக உத்தியோக பூர்வமாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

கொழும்பில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் ஒன்றுகூடிய கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், கட்சியின் எதிர்கால அரசியல் நலனை கருத்தில் கொண்டும் மற்றும் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை கவனத்திற்கொண்டும் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நியமனம் மூலம் கட்சியின் அமைப்பு பலப்படுத்தப்படும் என்றும், மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் கட்சியின் செயற்பாடுகள் மேலும் வலுப் பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிகழ்வில் கட்சியின் உயர்பீட உறுப்பினர்களும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துக் கொண்டிருந்தார்கள்









# கிரிக்கெட் கயிற்றுப்பாய் தரை விரிப்புகள் மூன்று காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் தீக்கிரை!

## காரைதீவில் கிரிக்கெட் கயிற்றுப்பாய்கள் தீக்கிரை !

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு விபுலானந்தா மைதானத்தின் அரங்கு அறையினுள் வைக்கப்பட்டிருந்த கடின பந்து கிரிகட் விளையாடும் மூன்று கயிற்றுப்பாய் விரிப்புகள் (Matting) இனம்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை தீமூட்டப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இதில் சுமார் 5 இலட்சம் ரூபாவுக்கும் மேலான சேதம் ஏற்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

காரைதீவு விளையாட்டுக்கழகம், விவேகானந்தா விளையாட்டுக்கழகம் மற்றும் ஜொலி கிங்ஸ் விளையாட்டுக் கழகத்திற்குச் சொந்தமான மூன்று பாய்களே இவ்விதம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக காரைதீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காரைதீவு பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி ஜயரத்ன மைதானத்துக்கு வருகைதந்து பார்வையிட்டார். இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளையும் மேற்கொள்வார் எனவும் தெரிவித்தார்.

---

### டித்வா சூறாவளி நிவாரணம்:

# தொழில்துறையினருக்கான 2 ஆம் கட்ட பதிவு ஆரம்பம்

டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட ஏற்றுமதி மற்றும் உற்பத்தித் துறைகள் உள்ளிட்ட வணிக நிறுவனங்களைப் பதிவு செய்யும் இரண்டாம் கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

உற்பத்தி மற்றும் சிறு அளவிலான தொழில்துறையினரின் கோரிக்கைக்கு இணங்க இந்த மறுபதிவு செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது.

இந்தப் பதிவு நடவடிக்கைகள் ஜனவரி 16 ஆம் திகதி வரை தொடரும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அமைச்சில் இதுவரை பதிவு செய்யப்படாத சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்சாலைகளுக்கு 200,000 ரூபா பேரிடர் நிவாரணக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

இந்த நிதி விநியோக நடவடிக்கைகள் அந்தந்த மாவட்டங்களின் பிரதேச செயலகங்கள் ஊடாக ஒருங்கிணைக்கப்படும்.



அமைச்சின் தரவுகளின் அடிப்படையில், 29,649 ஏற்றுமதி, உற்பத்தி மற்றும் சிறு்நடுத்தர வணிகங்கள் 9,628 ஏற்றுமதி மற்றும் உற்பத்தி தொழிற்சாலைகள் என்பன பதிவு செய்யப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட வணிகங்களுக்குத் தேவையான மேலதிக ஆதரவை வழங்கவும், இந்தச் செயல்முறைகளை எளிதாக்கவும் அமைச்சினால் 1,500 அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திருகோணமலை வீரநகர் பகுதியில் கடலரிப்பால் மூன்று வீடுகள் சேதம்

**(ஏ.எச்.ஹஸ்பர்)**

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத் திற்குட்பட்ட வீர நகர் கரையோரப் பகுதியில் கடும் சீரற்ற கால நிலை காரணமாக நேற்று மூன்று வீடுகள் கடலுடன் தாழ் இறங்கியுள்ளன.

இந்த வீட்டில் வசிக்கும் 19 நபர்கள் உறவினர்கள்களின் வீடுகளில் வசித்து வருகின்றனர். தொடர்ந்தும் கடலின் அலைகளின் அதிகமான தாக்கம் காரணமாக இந்த வீடுகள் மேலும் பாதிப்படையும் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக் கின்றனர். எதிர் வரும் காலங்களில் சீரற்ற கால நிலை மேலும் மோசமடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வீடுகளில் வசித்தவர்கள் தங்களுடைய வாழ்வாதாரம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். எனவே தங்களுக்கு நிவாரணம் வழங்குமாறும் உரிய அதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது குறித்துள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் ,திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் ஊடாகக் கலந்துரையாடி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வார் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன்ப்தெரிவித்தார்.











# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரி சேருநுவரவில் நேற்று கவனவீர்ப்பும் ஆர்ப்பாட்டமும்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, கந்தளாய் வலயக் கல்வி அலுவலகப் பிரிவிற்குட்பட்ட மஹாவலிகம மகா வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்து தருமாறு கோரி சேருநுவர மணிக்கூட்டுக் கோபுர சந்தியில்(அலி ஒலுவ சந்தி) நேற்று திங்கட்கிழமைகாலை கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பெற்றோர்கள், பாடசாலை மாணவர்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.



பின்னர் மணிக்கூட்டு கோபுரச் சந்தியிலிருந்து பிரதான வீதியூடாகச் சென்று சேருநுவர பிரதேச சபை வளாகத்திலும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மஹாவலிகம மகா வித்தியாலயத்தில் 450 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 34 ஆசிரியர்கள் தேவையான நிலையில் தற்போது 16 ஆசிரியர்களே இப்பாடசாலையில் காணப்படுகின்றனர். ஏனைய ஆசிரியர்களையும் பெற்றுத்தருமாறு கோரியே ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதால் மாணவர்கள் இடைவிலகி தூரப் பிரதேச பாடசாலைகளுக்கு செல்ல வேண்டியுள்ளனர் என இவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.





# கட்டுத் துவக்கில் சிக்கி சுண்டிக்குளத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

(மரியசீலன் திலைக்ஸ்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு சுண்டிக்குள பகுதியில் நேற்று கட்டுத் துவக்கு வெடித்து நபர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருபவை வருமாறு:-

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குள பகுதியில் அமைந்துள்ள சிறு கடலில் இறால் பிடிப்பதற்காக கேவில் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் சென்றுள்ளார்.

இதன் போது அங்கு மிருகங்களுக்கு பொருத்தப்பட்டிருந்த கட்டுத் துவக்கு எனப்படும் வெடியில சிக்கி காயம் அடைந்துள்ளார்.


காயமடைந்தவர் உடனடியாக பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கருப்பையா பத்மநாதன் என்னும் குடும்பஸ்தரே இவ்வாறு காயமடைந்தவர் ஆவார்.

அண்மைய காலங்களிலும் சட்டவிரோதமாக மிருகங்களுக்கு வைக்கப்படும் வெடி மருந்துகளில் சிக்கி பொதுமக்கள் காயமடைந்த சம்பவங்களும் சுண்டிக்குளம் பகுதியில் பதிவாகிய நிலையில் நேற்றும் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் 500 பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை



வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்ய வேண்டாமென பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பொலிஸ் மா அதிபர், சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய அறிவுறுத்தியுள்ளார்.

பஹலகமவிலுள்ள இலங்கை பொலிஸ் அகடமி மைதானத்தில் நடைபெற்ற பயிற்சி பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பிரியா விடை நிகழ்வில் பங்கேற்ற போதே பொலிஸ் மாஅதிபர் இதனை தெரிவித்தார்.

ஊழல் செயற்பாடுகள் உள்ளிட்ட சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறும் சிறந்த பொலிஸ் உத்தியோகத்தர்களாக முன்னேற வேண்டுமெனவும் பொலிஸ் மாஅதிபர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, போதைப்பொருள் குற்றங்களுக்காக சுமார் 500 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் ஒரு குழுவை பணிநீக்கம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் மாஅதிபர், சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.




# மின்னஞ்சல் மூலம் 3 கோடி ரூபா மோசடி: சி.ஐ.டிக்கு நீதிமன்றம் அதிரடி உத்தரவு

மின்னஞ்சல்களை அனுப்பி, முதலீட்டு வாய்ப்புகளை வழங்குவதாகக் கூறி சுமார் 3 கோடி ரூபா பணத்தை மோசடி செய்தமை தொடர்பில் உடனடியாக விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம நேற்று உத்தரவிட்டார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் நீதிமன்றில் இது குறித்து விடயங்களை முன்வைக்கையில், இணையம் ஊடாக பொதுமக்களுக்கு மின்னஞ்சல்களை அனுப்பி, அதன் மூலம் பல்வேறு திட்டங்களில் முதலீடு செய்வதன் ஊடாக அதிக இலாபம் ஈட்ட முடியும் என நம்பவைத்து இந்த பாரிய மோசடி முன்னெடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டனர்.

தற்போதைய விசாரணைகளின்படி, அப்பாவி மக்களை ஏமாற்றி இதுவரை 2 கோடியே 42 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதுதொடர்பானவிரிவானவிசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸ் அதிகாரிகள், மோசடியுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளதாகவும் நீதிமன்றில் தெரிவித்தனர்.

வழக்கை ஆராய்ந்த பிரதான நீதவான், இந்தச் சம்பவம் தொடர்பில் துரித கதியில் விசாரணைகளை நிறைவு செய்து, அதன் முன்னேற்ற அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பணிப்புரை விடுத்தார்.

Perpetual Treasuries Limited
For all your astute investments
Central Bank Appointed Primary Dealer

# பெர்பெச்சுவல் ட்ரஷரீஸ் மீதான தடை மேலும் 06 மாதங்களுக்கு நீடிப்பு

பெர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனம் ஒரு முதன்மை வணிகராக செயற்படுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும் நோக்கிலேயே இந்தத் தடைக்காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவின்படி, நேற்று முதல் அடுத்த 6 மாத காலத்துக்கு பெர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனம் முதன்மை வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.



## சித்திரத்தால் குழப்பம்:

# பொலிஸ் தாக்கியதாக இளைஞர் குற்றச்சாட்டு

கொஹுவல பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்ட சந்தேக நபர் எனத் தவறாகக் கருதி, பொரளை பொலிஸார் தம்மை கைதுசெய்து சித்திரவதை செய்தனர் என தெரணியகல பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தெரணியகல பகுதியில் சிறிய உணவகம் ஒன்றை நடத்தி வரும் இந்த இளைஞர், கடந்த முதலாம் திகதி தனது உணவகத்துக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்காகத் தனது சகோதரனுடன் கொழும்புக்கு சென்றுள்ளார்.

அன்றிரவு பொரளையிலுள்ள தனது மனைவியின் வீட்டில் தங்கியிருந்தபோதே அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் கொஹுவலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் என பொலிஸ் ஒரு மாதிரிச் சித்திரத்தை வெளியிட்டிருந்தது.

அந்தச் சித்திரத்துடன் இந்த இளைஞரின் முகம் சற்றே ஒத்துப்போனமையினால் அவர் வீடு புகுந்து பொரளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், அவர் அந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் அல்லவென உறுதி செய்யப்பட்டதும், மிகச் சாதாரணமாக பொலிஸார் அவரை விடுவித்துள்ளதுடன், போகும்போது முதுகில் தட்டி, மன்னித்துவிடுங்கள் தம்பி எனக் கூறி, அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தநிலையில், பொலிஸ் நிலையத்தில் நடந்த சம்பவங்களை அந்த இளைஞர் கண்ணீருடன் ஊடகத்துக்கு விபரித்துள்ளார்.

"விசாரணை என்ற பெயரில் என்னை மிருகத்தனமாகத் தாக்கினார்கள். அந்தச் சித்திரத்தைக் காட்டி, "இதில் இருப்பது நீதானே? எனக் கேட்டு நையப்புடைத்தார்கள். நான் எந்தத் தவறும் செய்யவில்லை என்று எவ்வளவோ கெஞ்சியும் அவர்கள் கேட்கவில்லை. இரண்டு நாட்களாக அந்த நரகத்தை அனுபவித்தேன்." என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பருத்தித்துறையில் யோகாசன வகுப்பு





பருத்தித்துறையில் 2026 ஆம் ஆண்டுக்கான யோகாசன வகுப்புகள் ஆரம்பித்துள்ளன.

யோகா ஆசிரியர் இரட்ணசோதியால் பருத்தித்துறை ஞானாலயம், அஞ்சலியகம் ஆகிய இரு இடங்களில் யோகாசான பயிற்சி வகுப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு தொடர் விடுமுறை விடப்பட்ட நிலையில் 2026 ஆம் ஆண்டிற்கான யோகாசன வகுப்பு கடந்த சனிக்கிழமை காலை தும்பளை, பருத்தித்துறை அஞ்சலியகத்தில் சிறப்பாக ஆரம்பமாகியது. மாணவர்கள் பெற்றோர் என பலரும் ஆர்வமுடன் கலந்துகொண்டு பயன்பெற்றார்கள்.

பருத்தித்துறை தும்பளையில் உள்ள அஞ்சலியகத்தில் சனி, ஞாயிறு தினங்களில் காலை 6.30 முதல் 7.45 வரையும், பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியில் உள்ள ஞானாலயத்தில் பிரதி செவ்வாய்க் கிழமை மாலை 5.30 முதல் 6.45 மணி வரை யோகாசன பயிற்சி வகுப்புகள் இடம்பெற்று வருகின்றன.





# கடல் கொந்தளிப்பு காரணமாக மூர்க்கம் கடற்கரை வீதி பாதிப்பு

பருத்தித்துறை நகரசபைக்கு உட்பட்ட மூர்க்கம் கடற்கரை பகுதியில் டித்வா புயல் காரணமாக பாரிய கடலரிப்பு ஏற்பட்டிருந்தது.

அங்குள்ள கொங்றீட் வீதியும் கடலரிப்பினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், மணல் மூடைகள், கற்கள் கொண்டு தற்காலிகமாக பாதுகாக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த நாள்களில் கடுமையான கடற்கொந்தளிப்பு நிலவிவரும் நிலையில், இந்த கொங்றீட் வீதி தாழிறங்கியுள்ளது.

அத்துடன், இருப்பதற்காக அமைக்கப்பட்ட வட்ட வடிவ இருக்கைகள் உள்ளிட்ட சீமெந்தினால் அமைக்கப்பட்ட இருக்கைகள், நடைபாதை உள்ளிட்ட கட்டுமானங்கள் அனைத்தும் கடலரிப்பினால் முற்றாக அழிவடைந்து காணப்படுகின்றன.









# கூட்டணி குறித்து முடிவெடுக்க தினகரனுக்கு முழு அதிகாரம்

## அ.ம.மு.க. பொதுக்குழு தீர்மானம்

தேர்தலில் கூட்டணி அமைப்பது தொடர்பாக முடிவெடுக்கும் முழு அதிகாரமும் டி.டி.வி. தினகரனுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு கூட்டம் தஞ்சாவூரில் நேற்று காலை நடைபெற்றது. கூட்டத்துக்கு வந்தவர்களை தஞ்சாவூர் மாநகர செயலாளர் ராஜேஸ்வரன் வரவேற்றார். கூட்டத்தில் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் துணைப் பொதுச் செயலாளர் எம். ரங்கசாமி உள்ளிட்ட மாநில நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம்:

2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் கூட்டணி தொடர்பான அனைத்து முடிவுகளையும் எடுக்க கட்சியின் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரனுக்கு முழு அதிகாரம் வழங்கப்படுகிறது.

முல்லைப் பெரியாறு, காவிரியில் புதிய அணையை கட்ட முயற்சிக்கும் கர்நாடகம் மற்றும் கேரளா அரசுகளின் முயற்சியை தடுத்து நிறுத்திட திமுக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் .

வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் மூலம் 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நியாயமானதாகவும், நேர்மையானதாகவும் நடைபெறுவதை உறுதி செய்ய தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்துக்கென தனியாக சாதி வாரி கணக்கெடுப்பினை நடத்திட தமிழக அரசின் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தி.மு.க. ஆட்சியில் ஈர்க்கப்பட்ட முதலீடுகள் மற்றும் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகள் குறித்து விரிவான அறிக்கையை தமிழக அரசு வெளியிட வேண்டும்.

இலங்கைக்கு தாரைவாக்கப்பட்ட கச்சதீவை மீட்டு தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 18 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# மாவட்ட செயலாளர்கள் கருத்துகளின்படி தேர்தல் கூட்டணி என்கிறார் பிரேமலதா



“2026 தேர்தலில் யாருடன் கூட்டணி என மாவட்டச் செயலாளர்கள் தங்களின் கருத்துகளை எழுதி பெட்டியில் போட்டுள்ளனர். அவர்களின் கருத்து அந்தந்த மாவட்ட மக்களின் கருத்து. அதன்படியே கூட்டணியை முடிவு செய்து கடலூர் மாநாட்டில் அறிவிப்பேன்.”

– இவ்வாறு தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

ஜனவரி 9 ஆம் திகதி நடைபெற உள்ள மாநாட்டுப் பணிகள் குறித்து தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில், அக்கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் சென்னை கோயம்பேட்டில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

மேலும், மாநாட்டுக்கு தொண்டர்களை அழைத்து வருவது, சட்டப்பேரவைத் தேர்தலை சந்திப்பது, கூட்டணி குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர், பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களிடம் பேசும்போது,

“தமிழகத்தில் தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருகிறது. தேர்தலை ஒட்டி, பல திட்டங்கள் அறிவிக்கப்படுகிறது. பொங்கல் பரிசுத் தொகை அனைவருக்கும் சென்று சேர வேண்டும்.

மாநாட்டுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

2026 தேர்தலில் யாருடன் கூட்டணி என மாவட்டச் செயலாளர்கள் தங்களின் கருத்துகளை எழுதி பெட்டியில் போட்டுள்ளனர். அவற்றை பிரித்து படிக்க இருக்கிறேன். அவர்களின் கருத்து அந்தந்த மாவட்ட மக்களின் கருத்து. அதன்படியே கூட்டணியை முடிவு செய்து எதிர்வரும் 9 ஆம் திகதி கடலூர் மாநாட்டில் அறிவிப்பேன். தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சிகளும் தே.மு.தி.கவுக்கு தோழமைக் கட்சி தான். தி.மு.க. 50 வீத வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளனர்.

இன்னும் 50 வீத வாக்குறுதிகளை நிறைவேற்ற இல்லை. திமுக ஆட்சியில் போதைப்பொருள் விற்பனை, சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. இதை யாரும் மறுக்க முடியாது. வரும் தேர்தலில் மக்கள் விரும்பிய அணி நிச்சயம் வெற்றி பெறும். ஆட்சியில் பங்கு என்ற குரல் இப்போது ஓங்கி ஒலிக்கிறது. அதற்கு சாத்தியமும் இருக்கிறது.

தி.மு.க. சிறந்த ஆட்சி கொடுத்ததா என்பதை மக்கள்தான் சொல்ல வேண்டும். ஆளும் கட்சியே சொல்லிக் கொள்ள முடியாது. நிச்சயமாக 2026 தேர்தல் ஒரு மாறுபட்ட தேர்தலாக இருக்கும்.

தை பிறந்தால் வழி பிறக்கும். வருகின்ற தேர்தலில், தமிழ்நாட்டுக்கும் தமிழக மக்களுக்கும் நல்லது நடக்கும் ஒரு தேர்தலாக இருக்கும் இந்த நிமிடம் வரை உறுதியான கூட்டணியை யாரும் அறிவிக்கவில்லை.” என்று அவர் தெரிவித்துள்ளார்.





# வெனிசுலாவின் இடைக்கால ஜனாதிபதிக்கு டொனால்ட் ட்ரம்ப் விடுத்துள்ள எச்சரிக்கை

“வெனிசுலாவின் இடைக்கால ஜனாதிபதி டெல்சி ராட்ரிக்ஸ் சரியானதைச் செய்ய தவறினால் கடும் விளைவுகளை அவர் சந்திக்க நேரிடும். அது நிகோலஸ் மதுரோ சந்திப்பதைவிட பெரிதாக இருக்கும்.”

– இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

வெனிசுலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவையும் அவரது மனைவியையும் அவரது நாட்டுக்கே சென்று கடந்த சனிக் கிழமை கைது செய்த அமெரிக்க பாதுகாப்புப் படை, அவர்கள் இருவரையும் நியூயோர்க் மாகாணத்தில் உள்ள புரூக்ளின் சிறையில் அடைத்துள்ளது. அவரது கைதுக்கு வெனிசுலா துணை ஜனாதிபதி டெல்சி ராட்ரிக்ஸ் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார். வெனிசுலாவின் ஒரே ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ தான் என்றும், அவரை அமெரிக்கா உடனடியாக விடுவிக்க வேண்டும் எனவும் கடுமையான வார்த்தைகளில் கூறி இருந்தார்.

வெனிசுலா நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாக பொறுப்பேற்குமாறு துணை ஜனாதிபதி டெல்சி ராட்ரிக்ஸ{க்கு அந்நாட்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், வெனிசுலா இடைக்கால ஜனாதிபதி டெல்சி ராட்ரிக்ஸ{க்கு கடும் எச்சரிக்கையை விடுத்தார். “அவர் சரியானதைச் செய்யத் தவறினால், பெரிய விலையை அவர் கொடுக்க நேரிடும். நியூயார்க் சிறையில் இருக்கும் நிகோலஸ் மதுரோவைவிட அது பெரிய விலையாக இருக்கும்” என ட்ரம்ப் எச்சரித்தார்.

வெனிசுலாவின் எதிர்காலம் குறித்த கேள்விக்கு பதில் அளித்த ட்ரம்ப், “அங்கு மறுகட்டமைப்பு செய்வது, ஆட்சி மாற்றம் செய்வது இப்படி நீங்கள் எதை வேண்டுமானாலும் அழைக்கலாம். அது இப்போது இருப்பதைவிட சிறந்ததாக இருக்கும். இதைவிட மோசமாக எதுவும் ஆகிவிடாது” என கூறினார்.

மேலும் அவர், “அமெரிக்காவின் தலையீட்டுக்கு உள்ளாகும் கடைசி நாடு வெனிசுலா எனச் சொல்ல மாட்டேன். டென்மார்க்கின் ஒரு பகுதியாக இருக்கும் அந்த பெரிய தீவு (கிரீன்லாண்ட்) நிச்சயமாக எங்களுக்குத் தேவை. அந்த தீவை தற்போது ரஷ்ய மற்றும் சீன கப்பல்கள் சூழ்ந்துள்ளன” எனத் தெரிவித்தார்.

டொனால்ட் ட்ரம்ப்பின் இந்தக் கண்டிப்பை அடுத்து பேசிய வெனிசுலாவின் இடைக்கால ஜனாதிபதி டெல்சி ராட்ரிக்ஸ், அமெரிக்காவுடன் இணைந்து செயல்பட தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார்.

இன்ஸ்டகிராமில் டெல்சி ராட்ரிக்ஸ் வெளியிட்டுள்ள பதிவில்,

“வெனிசுலாவில் இருந்து உலகுக்கும் அமெரிக்காவுக்கும் ஒரு செய்தி: வெனிசுலா அமைதியாகவும் பிறரோடு இணக்கமாகவும் வாழ்வதற்கான தனது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது.

வெளிப்புற அச்சுறுத்தல்கள் இல்லாமல், மரியாதை மற்றும் ஒத்துழைப்பு நிறைந்த சூழலில் வாழ எங்கள் நாடு விரும்புகிறது. ஒவ்வொரு நாட்டுக்குள்ளும் அமைதியை உறுதி செய்வதன் மூலமே உலக அமைதி கட்டியெழுப்பப்படுகிறது என்று நாங்கள் நம்புகிறோம். எங்களுடன் ஒத்துழைக்குமாறு அமெரிக்க அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

ட்ரம்ப் அவர்களே, எங்கள் மக்களும் எங்கள் பிராந்தியமும் அமைதியையும் பேச்சுவார்த்தையையுமே விரும்புகிறோம் போரை அல்ல. நிகோலஸ் மதுரோவின் செய்தியும் இதுதான். அதுவே இப்போது முழு வெனிசுலாவின் செய்தியாக உள்ளது. இதுவே நான் நம்பும் வெனிசுலா. இதற்காகவே நான் என் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளேன். வெனிசுலாவுக்கு அமைதி, வளர்ச்சி, இறையாண்மை மற்றும் எதிர்காலத்துக்கான உரிமை உண்டு.” என தெரிவித்துள்ளார்.

# எந்த நாடும் உலக நீதிபதியாக செயல்படுவதை ஏற்க முடியாது

## அமெரிக்காவுக்கு சீனா கடும் கண்டனம்



வெனிசுவெலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ அமெரிக்காவினால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, எந்தவொரு நாடும் உலகின் நீதிபதியாக தன்னிச்சையாகச் செயல்படுவதை ஏற்க முடியாது என சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ தெரிவித்துள்ளார்.

பீஜிங்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் இஷாக் தாருடனான சந்திப்பின் போதே அவர் இக்கருத்துக்களை முன்வைத்தார்.

எந்தவொரு நாடும் உலக காவல்துறையாக செயல்பட முடியும் என்று நாங்கள் ஒருபோதும் நம்பியதில்லை.

அதேபோல், ஒரு நாடு உலக நீதிபதியாகத் தன்னைக் கோருவதையும் நாங்கள் ஏற்கவில்லை என வாங் யீ குறிப்பிட்டார்.

சர்வதேச சட்டத்தின் கீழ் அனைத்து நாடுகளின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பு முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

# இன்றைய ராசி பலன்கள்- 06.01.2026




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். இன்று அதிர்ஷ்டம் காணப்படும். உங்களின் நம்பிக்கையான போக்கு காரணமாக பயனுள்ள முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணியில் பலன்கள் கிடைப்பது உறுதி. உங்கள் நேர்மையான முயற்சி மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். பணியில் உங்கள் செயல்திறனின் தரம் மேம்படும்.

உங்கள் அன்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இன்றைய நாளை ஒன்றாக இணைந்து கொண்டாடி திருப்தியடைவீர்கள்.

இன்று நிதிநிலைமை சாதகமாக உள்ளது. உங்கள் தேவைகளை சமாளிக்க சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

இன்று ஆற்றல் அதிகமாகக் காணப்படும்.




உங்கள் பொறுப்புகளை திறமையாக செயலாற்ற திட்டமிடுதல் அவசியம். பொறுமை காப்பது நல்ல பலனைத் தரும். விரைவாக முடிவெடுக்க முனைவீர்கள். இந்த உணர்வை கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் திறமையான முறையில் பணியாற்ற பணிகளை நன்கு கையாள வேண்டும். முன்கூட்டி திட்டமிட்டால் செயலில் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். மனம் திறந்த பேச்சும் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலமும் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று பணம் குறைந்து காணப்படும்.




இன்று சாதகமான நாளாக அமையாது. மனதை ஓய்வாகவும் அமைதியாகவும் வைத்திருக்க வேண்டும். வளைந்து கொடுக்கும் அணுகுமுறையும் புத்திசாலித்தனமும் தேவை.

பணியின் போது தவறு செய்ய வாய்ப்புள்ளது. கவனமாகப் பணியாற்றவும்.

உங்கள் துணையுடன் இன்று மோதல்கள் ஏற்படலாம். தேவையற்ற விவாதங்கள் உண்டாக வாய்ப்புள்ளது. அதனை தவிர்த்தல் நலம். இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும் போது கவனமாக இருக்க வேண்டும். இன்று சிறிது பதற்றமாகக் காணப்படுவீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜபங்கள் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.




இன்று லாபகரமான பலன்கள் கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுக்க உகந்த நாள். நீங்கள் சிறந்த தைரியத்துடன் காணப்படுவீர்கள்.

திறமையாகப் பணியாற்றி அதற்குரிய அங்கீகாரம் பெறுவீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாகப் பழகுவீர்கள். நீங்கள் உங்கள் துணையுடன் உல்லாசமாக பழக வேண்டும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். இன்று திடமாகவும் சௌகரியமாகவும் உணர்வீர்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள். அனுசரையான போக்கை மேற்கொள்ளுங்கள்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். கூடுதல் பணிகள் காரணமாக அதிக நேரம் பணி செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் காணப்படாது. உங்கள் துணையுடன் சுமுகமாகப் பழகினால் இந்த நாளை இனிமையாக ஆக்கலாம்.

இன்று பண வரவு காணப்படாது. பணப்பற்றாக்குறை காரணமாக கவலை ஏற்படும்.கீழே விழுந்து அதனால் பாதங்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான நாள். வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்களின் நம்பிக்கை இன்று பலிக்கும். திட்டமிட்டு செயலாற்றுவது இன்று நல்லது.

பணிகள் இறுக்கமாக காணப்பட்டாலும் குறித்த நேரத்திற்குள் பணிகளை முடிப்பீர்கள். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். குடும்பத்தில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சியில் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் மிகுதியாகக் காணப்படும். ஆக்கபூர்வமான காரியங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். இன்று எடுக்கும் சிறந்த முடிவுகள் வளர்ச்சி பெற உதவும். நீங்கள் உறுதியுடனும் உற்சாகத்துடனும் காணப்படுவீர்கள்.

பணியில் வளர்ச்சி காணப்படும். சக பணியாளர்களிடம் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையிடம் ஒளிவு மறைவின்றி பேசுவீர்கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். இன்று பாதுகாப்பாக இருக்க சேமிப்பீர்கள்.இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்கள் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.




இன்றைய நாள் சாதகமான பலன்களை கொடுக்காது. விரும்பியவாறு பலன்களை அடைய சிறப்பாக திட்டமிட வேண்டும். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது கவனம் வேண்டும். வெற்றியை அடைவதற்கு திட்டமிடல் உதவும்.

உங்கள் துணையுடனான உறவில் சுமுகமான நிலை காணப்படாது. உங்களின் வேறுபட்ட நடவடிக்கைகள் உறவை பாதிக்கும்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் கலந்து காணப்படும். பணப் பரிவர்த்தனைகளுக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். தியானம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.

# இன்றைய ராசி பலன்கள்- 06.01.2026




இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்காது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள். என்றாலும் உங்கள் பொறுப்பு மற்றும் அர்ப்பணிப்பு கொண்டு இன்றைய நாளை வெற்றிகரமாக ஆக்குவீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. ஆனால் இந்தப் பயணத்தில் சில விரும்பத்தகாத சூழ்நிலைகள் ஏற்படும் என்பதால் இனிமையான பயணமாக இருக்காது.

நீங்கள் உங்கள் துணையிடம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் பழக வேண்டும். நல்ல உறவை பராமரிக்க சிறந்த அணுகுமுறை தேவை.

வரவும் செலவும் இணைந்து காணப்படுகின்றது. நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை அனுபவிக்க இயலாது.

இன்று மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள். நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைய கடினமாக உழைக்க வேண்டும். அனைத்தையும் பொறுமையாக கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணிச்சுமைகள் கவலையை அளிக்கும். சக பணியாளர்களிடம் மோதல்கள் ஏற்படும் வாய்ப்புள்ளதால் கவனமாக உரையாட வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பு முறையில் பழகுவீர்கள். இம்மாதிரி அணுகுமுறையால் நீங்கள் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க முடியும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாகவும் புத்துணர்ச்சியுடனும் இருக்க வேண்டும்.

பணிகளை பொறுமையான அணுகுமுறையோடு மேற்கொள்ள வேண்டும். பணிகள் பரபரப்பாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். உங்கள் குடும்பத் தேவைகளுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் பதற்றமாக காணப்படுவீர்கள். தியானம் மூலம் நீங்கள் அமைதி பெறலாம்.




உங்கள் முயற்சிகளில் வளர்ச்சியும் வெற்றியும் காணப்படும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும் வகையில் இன்றைய நாள் சுமுகமாக இருக்கும்.

உங்களின் அருமையான செயல் திறன் மூலம் உங்களுக்கு வெகுமதியும் அங்கீகாரமும் கிடைக்கும். உங்களின் புத்திசாலித்தனம் மற்றும் சிறந்த செயல் மூலம் வெற்றிக்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பீர்கள். இதனால் அவருக்கு உங்கள் மீது நம்பிக்கை பெருகும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. இன்று உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

இன்று ஆற்றல் மிக்க மன நிலை காணப்படும். இது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.





# வட்டவளை - நாவலப்பிட்டி இடையே சிறப்பு ரயில் சேவை நேற்று ஆரம்பம்

## ஹட்டன் வரை நீடிக்க பயணிகள் கோரிக்கை

**(பொகவந்தலாவ நிருபர்: எஸ்.சதீஸ்)**

பேரிடருக்குப் பிறகு பாடசாலை தவணை நேற்றுத் தொடங்கவுள்ள நிலையில், பாடசாலை மாணவர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களின் வசதிக்காக வட்டவளையிலிருந்து நாவலப்பிட்டிக்கு சிறப்பு ரயில் சேவையை சேர்க்க ரயில்வே கட்டுப்பாட்டு அறை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த ரயில் நேற்று முதல் பின்வரும் நேரங்களில் இயக்கப்படும்:-

- ரயில் வட்டவளை ரயில் நிலையத்திலிருந்து காலை 5:15 மணிக்கு புறப்பட்டு காலை 6:30 மணிக்கு நாவலப்பிட்டியை அடையும்.
- பிற்பகல் 2:15 மணிக்கு நாவலப்பிட்டியிலிருந்து புறப்பட்டு மீண்டும் வட்டவளை ரயில் நிலையத்திற்குச் செல்லும்.





ஹட்டன் வரையிலான ரயில் பாதை தடைகள் இல்லாமல் போக்குவரத்துக்கு ஏற்ற நிலையில் இருப்பதால், இந்த ரயில் சேவையை ஹட்டன் வரை நீட்டிக்குமாறு பயணிகள் ரயில்வே துறையிடம் கோரிக்கை விடுக்கின்றனர். இது சுற்று றுவட்டாரங்களுக்கு அப்பால் பயணிக்கும் பயணிகள் மற்றும் மாணவர்களுக்கு பெரும் நிம்மதியை அளிக்கும் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.